**செ. கு. எண்: 095** **நாள்: 19.06.2018**

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 19.6.2018</u>

கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் வட்டம், கொமாரபாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. முகம்மது ஷெரிப் என்பவர் மின்பராமரிப்பு பணி மேற்கொள்ளும்போது உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் வட்டம், தேன்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த திரு. தண்டபானி என்பவர் அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்ததில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

காஞ்சிபுரம் மாவட்டம், ஆலந்தூர் வட்டம், மணப்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த திரு. வடிவேல் என்பவர் பணி செய்யும்போது மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி வட்டம், அரசமலை சரகம், நல்லூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. பெரியசாமி என்பவர் மின் கம்பத்தில் பழுது நீக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் வட்டம், புதுக்கோட்டை கிராமம், காளிசெட்டிபட்டி புதூரைச் சேர்ந்த திருமதி. சரோஜா என்பவர் அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்ததில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

அரியலூர் மாவட்டம் மற்றும் வட்டம், மேலக்காவட்டாங்குறிச்சி கிராமத்தைச் சேர்ந்த திரு. கோவிந்தராசு என்பவரின் மனைவி திருமதி. சத்தியப்பிரியா என்பவர் வயலில் இருந்து புல்கட்டு தூக்கி வரும்போது மின்கம்பி உரசியதில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், உள்ளூர் கிராமம், கொரநாட்டுக்கருப்பூரைச் சேர்ந்த திரு. ஆனந்குமார் என்பவரின் மகன் செல்வன் தமிழழகன் என்பவர் நீர்தொட்டியின் மின்சார பொத்தானை தொட்டபோது மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் வட்டம், மேலையூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. அர்ச்சுனன் என்பவரின் மகன் திரு. சுப்பிரமணி என்பவர் விவசாய நிலத்திற்கு நீர் பாய்ச்ச சென்றபோது அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்ததில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், நட்டாலம் ‘B’ கிராமத்தைச் சேர்ந்த திரு. ஹரிதாஸ் என்பவர் மின்சார கம்பத்தில் பழுது நீக்கும் பணியில் ஈடுபட்டிருந்தபோது மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டம், பொற்படாக்குறிச்சி கிராமத்தைச் சேர்ந்த திரு. வீரமணி என்பவரின் மகள் செல்வி தர்ஷினி என்பவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், திருப்புறம்பியம் கிராமத்தைச் சேர்ந்த திரு. பேச்சிமுத்து என்பவரின் மகன் திரு. பொன்னுசாமி என்பவர் வயலில் உள்ள மின் மோட்டார் கம்பியை தொட்டபோது மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

இராமநாதபுரம் மாவட்டம், கமுதி வட்டம், கோவிலாங்குளம் உள்வட்டம், பூமாவிலங்கை கிராமத்தைச் சேர்ந்த திரு. முருகேசன் என்பவரின் மகன் திரு. கணேசன் என்பவர் ஆடு மேய்த்துக்கொண்டிருந்தபோது அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்ததில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் வட்டம், வீரக்கல் கிராமம் உட்கடை நாகப்பன்பட்டியைச் சேர்ந்த திரு. வெங்கட்ராமன் என்பவரின் மகன் திரு. வினோத்குமார் என்பவர் வேப்ப மரத்தில் ஏறி ஆடுகளுக்கு தழைகள் பறித்துக்கொண்டிருந்தபோது அவ்வழியே செல்லும் உயர்மின் அழுத்த மின்சார கம்பியை தொட்டபோது மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் வட்டம், கொடிக்குறிச்சி கிராமத்தைச் சேர்ந்த திரு. பரமசிவத்தேவர் என்பவரின் மகன் திரு. புதியவன் என்பவர் வயலில் அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்ததில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வட்டம், ஆர். புதுக்கோட்டை கிராமத்தைச் சேர்ந்த திரு. எல்லப்பன் என்பவரின் மகன் திரு. பசுபதி என்பவர் ஊராட்சிக்கு சொந்தமான ஆழ்துளைக் கிணற்றை சரிசெய்யும் பணியின் போது, மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி வட்டம், மாவத்தூர் கூட்டுரோட்டைச் சேர்ந்த திரு. மாணிக்கம் என்பவரின் மகன் திரு. ராஜேந்திரன் என்பவர் வயலில் அறுந்து கிடந்த மின் கம்பியை மிதித்ததில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம், அரங்கமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சக்திவேல் என்பவரின் மகன் திரு. பிரஷாந்த் என்பவர் வயலுக்கு நீர் பாய்ச்ச சென்றபோது மின்கம்பத்திலிருந்து மின்கசிவு ஏற்பட்டு மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருப்பூர் மாவட்டம், உடுமலை வட்டம், ஏரிப்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. நாகராஜ் என்பவரின் மகன் திரு. பிரபு என்பவர் பழனி வட்டம், முத்துநாகக்கன்பட்டி கிராமத்தில் மின் மோட்டார் பழுது நீக்கும் பணியில் ஈடுபட்டிருந்தபோது, மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவங்களில் உயிரிழந்த **18** நபர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இச்சம்பவங்களில் உயிரிழந்த **18** நபர்களின் குடும்பத்திற்கு தலா மூன்று லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**